Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Psychological States of Women in the Novel *Maanathuku Anji*

**A. Sahaya Susi,** Reg No: 41130601012, Tamil Research Scholar,
Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0009-7244-734X**
**Dr. S. Elamaran,** Assistant Professor, Research Centre of Tamil,
Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980**
**DOI: 10.5281/zenodo.14744672**

## Abstract

*It has been a taboo in everyone's mind that women have an inferiority complex in their genes. Every woman must try from the depths of her soul to break through these stereotypes. It is an indisputable fact that no matter what advice is given to a woman will not work if the woman does not try on her own. Every woman should realize that a woman is a human being and not a property. Women who are controlled by men should try to understand the realities. Many educated women predict their future through their knowledge. So, women have to think and should conclude in any matters. "Maanathuku Anji" is a novel from Tamil Literature that deals with the psychological state of women. The character Selvi from the novel "Maanathuku Anji" has been taken for study. There is something in her inner mind that honour is greater than life and she takes her own life to save it. Her dignity can be understood in the events that take place before her death. When men's involvement in the family diminishes, women's moods and struggles reveal how they can mentally navigate the illusory constraints of the world they live in. Thus, the article decodes the state of women in the novel from a psychological perspective.*

**Keywords:** Psyche Safety, Women, Neythal, Reputation, Tsunami, Novel, *Maanathuku Anji*.

## References

[1] Ilampooranar. *Tholkappiyam Porulathigaram*. 13th Edition 2014, Saratha Publishing House, Chennai- 600 014.
[2] Berlin, C, Kurumpanai. *Manathukku Anji*. Selali Publishing House, 2021.
[3] Dooran, P. *Manamum athan Vilakkamum.* Pari Nilayam, 59, Broadway. Chennai – 1
[4] Prema, I. *Penn Ezhuthukkalil Arasiyal.* Arivu Publishing House, 142 – 17, Johnny John Khan Road, Royapettah, Chennai – 600 014. 2007.
[5] Muthu Chidambaram, S.*Thamizhaga Naatupuraviyalil Penngal*. Muthu Publishing House, Tirunelveli- 627 002. 2nd edition 2005
[6] Muthu Chidambaram, S. *Penniyam Thotramum Valarchiyum.* Pari Nilayam, Chennai – 1.
[7] Stephen Sam, N. *Kanyakumari Mavatta Meenavargalin Vaazhviyal Oor Aaivu.* Thangam Publishing House, 17-63 West Kallukkutam, 629 808, 1994,

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# *மானத்துக்கு அஞ்சி* நாவல் வெளிப்படுத்தும் பெண் உள நிலைகள்

**அ. சகாய சுசி,** பதிவு எண்: 41130601012, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், குமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0009-7244-734X**
**முனைவர் சு. இளமாறன்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர் குமரி மாவட்டம். தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980**
**DOI: 10.5281/zenodo.14744672**

**ஆய்வுச்சுருக்கம்**

*பெண்கள் மரபணுவிலேயே தாழ்வு மனப்பான்மை, அச்சம், மடம், நாணம் உடையவர்கள் என்பது எல்லோர் மனதிலும் பதிவு செய்யப்பட்டு விட்டது, இவற்றை உடைத்தெறிந்து வெளியில் வர ஒவ்வொரு பெண்ணும் அவளது அடிமனதின் ஆழத்திலிருந்து முயல வேண்டும். என்ன தான் அறிவுரைகள் வெளியில் இருந்து கூறினாலும் பெண் தன்னளவில் முயலாவிட்டால் பலனில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பெண் வெறும் போதையோ அல்லது பகடைக்காயோ அல்ல வாழும் கழகம் என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும். அவ்வாறான கீழ் மனநிலைகளை உடைத்தெறிய வேண்டும். பெண் தன்னளவில் முன்னேற வேண்டும். அவளுக்கானப் படிப்பினைகளை அவளே முன்னெடுக்க வேண்டும். பெண் என்றால் திருமணம் என்னும் தூக்கு சங்கிலிக்குள் முடங்கி கிடக்கும் துருபிடித்த இரும்பல்ல. போராளி, என்பதை உணர வேண்டும். உலகம் கூறும் கட்டுப்பாட்டில் பழகிய பெண்கள் எதார்த்தங்களைப் புரிந்துகொண்டால் நலம் பயக்கும். உலகத்தின் மாய பிம்பத்தில் சிக்கிக் கொண்டு தனக்குத்தானே வரையறை வகுக்கும்போது உயிரும் சிலநேரங்களில் துச்சமாக உணரப்படுகிறது.கல்வியறிவு பெற்ற பெண்கள் தங்களது எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை தங்களின் பட்டறிவின் மூலமாக கணிக்கின்றனர். "மானத்துக்கு அஞ்சி" நாவலில் செல்வி என்னும் கதாபாத்திரம் விளங்குகிறது. அவளது இறப்பிற்கு முன் நடக்கும் நிகழ்வுகளில் வரும் பெண்களின் மனநிலையை வைத்து மானம் பற்றிய உளவியல் வரையறையைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆணின் ஈடுபாடு குடும்பத்தில் குறையும் போது பெண்களின் மனநிலையும் அவர்தம் கஷ்டப்பாடுகளும் மனரீதியாக அவர்கள் படும்பாடும் உலகின் மாயையான கட்டுப்பாடுகளை எதிர்த்து தங்களால் பயணிக்கமுடியும் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. மேலும் ஆடை கட்டுப்பாடு என்னும் பெயரில் நடக்கும் கூத்தினால் தினமும் வெந்து அல்லல்ப்படும் நிலைக்கு உள்ளாகும் அவலத்தையும் சுட்டிக்காட்டுகிறது.*

**திறவுச்சொற்கள்:** உளநலம், பெண்கள், நெய்தல், மானம் பெரிது, ஆழிப்பேரலை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


**முன்னுரை**

வாழ்க்கையிலே பல விஷயங்களைப் பற்றி நாம் சிந்திக்கின்றோம். சிந்தித்து முடிவுக்கு வந்த பிறகுதான் எதையும் செய்யவேண்டும் என்கிறோம். மனம் என்பதொன்றில்லாவிட்டாலும் எவ்வாறு யோசனை செய்ய முடியும் என்று ஐயம் உண்டாகலாம். இதனடிப்படையிலே தான் மானத்துக்கு அஞ்சி நாவலில் வரும் செல்வி என்னும் கதாபாத்திரம் விளங்குகிறது. தனது உள் மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு உயிரைவிட மானம் பெரிது என்று தானாகவே தனது உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அவளது இறப்பிற்க்கு முன் நடக்கும் நிகழ்வுகளில் வரும் பெண்களின் உளசிக்கலை இக்கட்டுரையில் காண்போம்.

**மேலைநாட்டுப் பெண்ணியம்**

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தொழிற்புரட்சியின் விளைவாகவும், பெண் கல்வியின் தாக்கத்தாலும், சமூக, பொருளாதார, மத, அரசியல் விட்டு வெளியேறி வந்து பெரும்பாலான பெண்கள் புறவாழ்க்கையில் ஈடுபட்டனர். இதனால் ஏற்கனவே நிலவிய மரபு சார்ந்த பெண்ணியம் மாறுதல் பெற்றுப் புதுவகைப் பெண்ணியம் தோன்றலாயிற்று. (பெண்ணியம் அணுகுமுறையும் இலக்கியப் பயன்பாடும் ப.எண் 41) 1920ஆம் ஆண்டுக்குப்பின் இங்கிலாந்தில் பல பெண்ணிய இயக்கங்களும் போராட்டங்களும் தோன்றின. பெண் உரிமைக்கு ஏற்ற பல சட்டங்கள் ஏற்பட்டன. ஐரோப்பியப் பெண்கள் பெரும் மாறுதலுக்கு உள்ளானார்கள். வாழ்க்கைப் போக்குமாறியது சமத்துவம் நிலவியது பொதுப்பணிகளில் பங்கு கொண்டனர். பெண் உரிமைகளின் பேரால் சில வேண்டாத்தகாத விபரீதப் போக்குகளும் தோன்றியது.

**இந்தியப் பெண்ணியம்**

இந்தியப் பெண்கள் தம் தாழ்ந்த நிலைமையைத் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கொடுமையை அடக்குமுறையை அறியும் அறிவின்றி, அறியாமையில் மூழ்கி மூடத்தனத்தால் கட்டுண்டு ஊமைகளாய், செவிடர்களாய், குருடர்களாய், அடிமைச் சேற்றில் புதையுண்ட அமைதியாக எதிர்பின்றி தம் நிலையை ஏற்றுத் துன்பத்தில் கிடந்தனர். இந்நிலையில் இந்தியப் பெண்ணியம் எழுச்சி கொண்டது. இந்தியா முழுவதும் 19 – ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியப் பெண்களின் நிலையை (ச.முத்துச் சிதம்பரம், *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்*, ப. எண் 105-136). என்னும் நூலில் பட்டியலிட்டுக் காட்டுகிறார். 1. சமூக மதிப்பில் இழிந்தநிலை, 2. சமயத்தத்துவ நோக்கில் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலை, 3. கல்வி உரிமையற்ற நிலை, 4. அறியாமையிலும் மூடத்தனத்திலும் அவிழ்ந்த நிலை, 5. பெண்சிசுக்கொலை, 6. பால்ய விவாகம், 7. பெண்களைத் தனிமைப்படுத்துதல், 8. ஆண்களின் பலதாரமணம், 9. தேவதாசி முறை, 10. கைம்பெண் மறுமண மறுப்பும் கைம்மைக் கோலமும், 11. சதி என்னும் உடன்கட்டை ஏறுதல் (ஏற்றுதல்), 12. திருமணத்தில் பெண் உரிமை மறுப்பு ஆகியவற்றைக்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

குறிப்பிட்டுள்ளார். இந்தியச் சமயங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் காவியங்களிலும் தெய்வநிலையில் வைத்துப் பேசப்பட்ட பெண்ணின் தெய்வீகப் பெருமை பெற்ற நிலை நடைமுறையில் பின்னுக்குத் தள்ளப்பட்டது. சமயத்தத்துவங்களும், சாத்திரங்களும் நீதிநூல்களும் கடவுளின் பெயராலும், தர்மத்தின் பெயராலும், பெண் அடிமைக்குத் துணையாயின,இதனால் பெண்முற்றிலும் அடிமையானாள்.

**சங்க இலக்கியத்தில் பெண் வரையறைகள்**

சங்க இலக்கிய நூலும் பெண்ணின் வரையறையை கூறியுள்ளது. அவற்றில் பெண்கள் இப்படிதான் வாழ வேண்டும், பேச வேண்டும்,இயங்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை விதித்துள்ளதையைக் காணமுடிகிறது.

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப. (தொல்., களா. 7)**
**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று. (தொல்., களா. 22)**

அச்சமும் நாணமும் தலைமகளுக்கு உரியது மேலும் உயிரை விட நாணம் பெரிது எனத் தொல்காப்பியம் வரையறைச் செய்கிறது.

**ஆசிரியர் குறிப்பு**

குறும்பனை சி பெர்லின் அவர்கள் நெய்தல் இயக்கம் என்னும் இயக்கத்தைத் தொடங்கி கன்னியாகுமரி மாவட்ட கடலோர கிராம மக்களின் வாழ்வாதாரத்துக்காகப் பெரிதும் பங்காற்றி வருகிறார். புதினம், சிறுகதை, கட்டுரை,அகராதி என 50- க்கும் அதிகமான நூல்களை எழுதியவர். பன்முக நோக்கில் இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளுமைக் கொண்டவர். தனது படைப்புக்களில் எல்லாம் கடலோர மக்களின் வாழ்வியலையும், அரசிற்கு எதிரான தனது ஆதங்கங்களையும் வெளிப்படுத்துகிறார். கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் போராட்டங்களில் பெரும் தூணாய் இருப்பவர் இவர். எழுத்தினால் மட்டுமல்ல தனது செயலாலும் மீனவர்களுக்கு உற்றத்துணையாக இருந்து வழிகாட்டுபவர் இவர். நெய்தல் படைப்பாளர்களின் பிரபலமான எழுத்தாளராக குறும்பனை சி பெர்லின் விளங்குகிறார். இவருடைய மானத்துக்கு அஞ்சி என்னும் நாவல் வெளிப்படுத்தும் பெண் மன உளவியலை மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

***மானத்துக்கு அஞ்சி***

2004, டிசம்பர் 26 கடற்கரை மக்களின் மனதில் யாராலும் எதனாலும் அழிக்கமுடியாத, மறக்கமுடியாத நாளாக மாறிவிட்டது. சுனாமி பேரலையில்கடற்கரை கிராமங்கள் சிக்கி சின்னபின்னமான நாள். கடலோர மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட சுனாமி பேராலையின் தாக்கத்தை மையமாக வைத்து இந்நாவலை எழுதியிருக்கிறார்.நாவலின் நாயகி செல்வி, சென்னையிலிருக்கும் செல்வனுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டவள் திருமணக்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

கனவில் மிதந்துக் கொண்டிருந்தவள் சுனாமியால் என்ன ஆனாள் என்பதையும் கடற்கரை கிராமங்களில் புற்றீசல் போல பரவியிருக்கும் புற்றுநோய் மற்றும் பெண்களின் உளநிலைபாடுகள் பற்றி"மானத்துக்கு அஞ்சி"நாவல் விளக்குகிறது.

**ஏங்கும் நிலை**

தனது உயிர்த்தோழிக்கு திருமணம் நடக்கயிருக்கிறது. ஆனால் அவளைவிட ஐந்து வயது அதிகமாக இருந்தாலும், தனக்கு இன்னும் திருமணம் நடைபெறவில்லை, திருமணம் நடந்திருந்தால் பள்ளிக்கூடம் செல்லும் வயதை அந்தக் குழந்தை எட்டியிருக்கும். ஆனால் அப்படி நடக்காததற்க்கு காரணம் தன்னுடைய குடிகார தந்தைதான் என்பதை நினைத்து மனதில் மிகவும் வருந்தினாள். இருந்தாலும் அதனை வெளிக்காட்டாமல் செல்வியின் திருமணத்தில் மணப்பெண் தோழியாக இருந்து தனது கவலையை மறக்க முயற்சி செய்தாள் அருள்மேரி.

**தாயின் பரிதவிப்பும், முயற்சியும்**

கொமுரு மூணும் மோடு முட்ட வளந்து நிக்குது. இதுகளுக்கு நான் ஒரு கல்யாணம் காச்சைய எப்ப பாக்கப்போறேன்? என்று குமுறிக்கொண்டு மீன் சருவத்தைத் தலையில் தூக்கி மீன் விற்பனைக்கு இறங்கினாள் அருள்மேரியின் தாய் மார்க்கிரேட். குடும்பத்தை நிர்வகிக்கும் ஆண் சரியில்லாத வேளையில் பெண்கள் மீன் விற்பனைக்கும், மால் முடிக்கும் வேலைக்கும் கடற்புரத்துப் பெண்கள் செல்கின்றனர். தனது குடும்பச் சுமையைத் தாங்கி நின்று சமூகத்தில் தான் பெற்ற பிள்ளைகள் அனைத்தையும் வளர்த்தெடுக்கத் துணிகிறாள். அதனால் திருமண வயதைஎட்டியும் இன்னும் திருமணமாகாத தனது பிள்ளைகளைப் பற்றி நினைத்து குமுறுகிறாள்.

**பெண் கல்வி**

எதிர்காலத்தில் விளைவனவற்றை எண்ணிப் பார்த்து மனிதன் பல செயல்களைப் புரிகிறான். பல நுல்களைக் கற்றுத் தேர்ந்து பட்டம் பெற முயல்கிறான். அப்படிப் பட்டம் பெறுவதால் விளையப்போகும் நன்மையை எண்ணியே அவன் பெரு முயற்சி எடுத்துக்கொள்கிறான், பின்னர் வரப்போவதை முன்னாலேயே எதிர்பார்க்கும் தன்மையானது புலன் உணர்வால் ஏற்படும் செயலாகாது. அவ்வாறு எதிர் பார்க்கக்கூடிய திறமைக்கு மனமே காரணமாக இருக்க வேண்டும். செல்வியின் தோழிகளில் ஒருத்தி ஏஞ்சல், முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு படித்து வருகிறாள். பழமையின் மீது கொண்ட ஈர்ப்பால் கடலோர கோவில்களையும் அவற்றின் கட்டுமானங்களையும் பற்றி ஆய்வு செய்கிறாள். அதனடிப்படையில் கோவில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள், கட்டிடம் ஆகியவற்றைப் பற்றி அவள் அறிந்துகொண்ட தகவல்களை தன் தோழிகளுக்கு எடுத்துக்கூறினாள். கடற்கரை கிராமங்களில் மணல் ஆலைகள் மூலம் மண் எடுப்பதால் அங்குள்ள பெரும்பாலான மக்களுக்கு புற்றுநோய் வருகின்றதுஎன்பதை தான் கலந்து கொண்ட கருத்தரங்க செய்திகள் வாயிலாகவும்,

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

படித்த புத்தகங்கள் மூலமாகவும் தெளிவுப்படுத்தினாள். கடற்கரையை முற்றுமாக அழிப்பதால் வரும் தலைமுறைக்கு ஏற்படும் தீமைகளை எண்ணி தோழியர் அனைவரும் வருந்துகின்றனர்.

**ஆடை கட்டுப்பாடு**

வீட்டில் வந்ததும் உடுத்தியிருந்த பட்டுப்புடவையை கழற்றி கட்டிலில் போட்டாள் செல்வி, பட்டுசாரி கசங்கி போய் இருந்தது. அடிபாவாடை வரை அவிழ்த்ததும் அப்பாடா என்று ஆசுவாசப்பட்டாள். பாவாடை கட்டியிருந்த நாடா அச்சு ஒரு இஞ்ச் ஆழத்திற்கு இடுப்பில் அச்சு பதிந்திருந்தது. அந்த இடத்தில் வெளிக்காற்று பட்டதும் இதமாக இருந்ததுஇருந்தாலும் அந்த இடத்தை அழுத்தி சொரிந்து நிம்மதியடைந்தாள் செல்வி. பெண் என்றால் இத்தகைய ஒரு ஆடை அமைப்பை அவள் தன் வாழ்வில் நடைமுறை செய்தே ஆகவேண்டும் என்பது வரையறைச் செய்யப்படாத ஒன்றாக இன்றளவும் உள்ளது என்பதை செல்வி கதாபாத்திரம் முன்வைக்கிறது.

**முந்நீர் வழக்கம்**

முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை என்பதில் கடலுக்குச் செல்ல பெண்களுக்கு அனுமதியில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் கடற்பரப்பில் பெண்கள் ஒரு வருடத்திற்கு இரண்டு முறை கடலுக்குச் செல்கின்றனர். ஒன்று கிறிஸ்துப்பிறப்பு அன்று, மற்றொன்று கிறிஸ்து உயிர்த்தெழுதல் ஆகிய இரண்டு நாட்களிலும் பெண்கள் கடலில் மூழ்கி விளையாட கடற்கரை சமூகத்தில் பெண்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அன்று அவர்களின் விருப்பம்போல் எவ்வளவு நேரமானாலும் கடலில் விளையாடலாம்.குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அந்த இரண்டு நாட்களிலும் கடற்கரையிலேயே தான் அதிகமாக இருப்பார்கள்.

**மரணத்தின் வாசல்**

ஆற்றில் மகிழ்ச்சியாகக் குளித்துக்கொண்டிருந்த அனைவரையும் எங்கிருந்தோ வந்த இராட்சத அலை புரட்டிப்போட்டது. அடுத்தக்கணமே அவர்களிடம் இருந்த சந்தோச அலைமறைந்து மரணஓலங்கள் கேட்க ஆரம்பித்தது. ஆற்றுநீரில் கடல்நீர் சேர்ந்து ஒன்றாக வரவே பெருவெள்ளத்தில் அனைவரையும் அடித்துச் சென்றது. விஜயனும் அகிலனும் ஆற்றுச் சுழுக்கிலிருந்து எப்படியோ தப்பிப் பிழைத்துஒன்றாக சேர்ந்துகொண்டனர். இருவரும் தண்ணீரில் அடித்து வந்த அருள்மேரியைத் தூக்கிக் கரையில் கிடத்தினர். அருள்மேரி கட்டியிருந்த துணி அவிழ்ந்து போய் பிறந்த மேனியாகக் கிடந்தாள் அகிலன் தான் கட்டியிருந்த சாரத்தை உருவி அருள்மேரியின் உடலை மூடினான். இப்போது விஜயனும் அகிலனும் வெறும் ஜட்டியோடு அடுத்த ஆளைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கினார்கள்.

தன்னை ஒருத்தன் கையைப் பிடித்துக் காப்பாற்ற வந்துவிட்டானே நானும் பிழைத்துக் கொள்வேன் என்ற நிம்மதி பெருமூச்சோடு அவன் கையை வாரிப் பிடித்தாள் செல்வி, வெள்ளத்தின் மட்டத்தை விட்டு மேலே வந்த பிறகுதான் அவளுக்குத் தெரிந்தது தான்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

உடுத்தியிருந்த சாரம் உரிந்து போயிருக்கிறது என்று, தான் பிறந்தமேனியாய் இருப்பதை இன்னொரு ஆண்மகன் அதுவும் தன் உயிர்த்தோழியின் காதலன் கிட்டத்தில் இருந்து பார்க்கப் போகிறானே என்ற கொறச்சலில் அவள் உடம்பெல்லாம் கூசிப்போனது. உடனே விஜயன் இருக்கிப் பிடித்திருந்த தன் கையை பட்டென்று பலங்கொண்டு உதறி விடுவித்துக் கொண்டு வெள்ளத்துக்குள் முங்கிப் போனாள் செல்வி, அவள் முங்கிய வேகத்தில் சுழன்றடித்த சுழியில் மாட்டி அலைக்கழித்தது வெள்ளம். ஏன் இப்படி கையை உதறிவிட்டுக் கொண்டு தண்ணீருக்குள் முங்கிப்போனாள் என்று விஜயனால் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை, ஒருவேளை சேறு சகதியாக இருப்பதால் கை தானே வழுவிப் போயிருக்குமோ என்று நினைத்துக் கொண்டே சுழிக்குள் சாடினான்.அகிலனை கட்டுமரத்தை அருகில் கொண்டுவர சைகை காட்டி விட்டு சுழலில் சிக்கிச் சுழன்று கொண்டிருந்த செல்வியின் முடியை கொத்தாகப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து கட்டுமரத்தில் ஏற்றினான் விஜயன். இப்போதும் தலைமேலே வந்து மேலே எழும்பியதும் செல்வி விஜயனின் கையைப் பலங்கொண்டு தன் பற்களால் இறுக்கிக் கடித்தாள் வலி தாங்காமல் ஆ… என்று அலறி கைகளை உதறவும் விஜயனின் கையில் பிடித்திருந்த கூந்தல் விடுபட்டு செல்வி வெள்ளத்துக்குள் முங்கி மாயமானாள். தன் உயிரைவிட தனது பண்பாடும், பழமையானப் பாரம்பரியமும் தான் தனக்கு முக்கியம் என்று தனது உயிரைத் துச்சமாக எண்ணி விட்டாள். பெண்கள் எவ்வளவோ முன்னேற்றம் கண்டாலும் இத்தகைய ஆபத்தான மனநிலையோடும் இன்னும் சில பெண்கள் வாழ்ந்து வருவதற்கு செல்வி சான்றாகிறாள்.

**முடிவுரை**

பெண்கள் தங்களுடைய ஒழுக்கநெறியைப் பின்பற்றி வாழவேண்டிய சூழல் நிலவும் இந்திய கலாச்சாரத்தில் இன்னொருவருக்கு மண ஒப்பந்தமான தன்னை பிற ஆண்மகன் ஆடையின்றி பார்த்தல் கூடாது என்பதற்காக உயிரை விட மானம் பெரிது என்று ஆழியின் வேகத்தில் தானாகச் சிக்கிக்கொள்கிறாள். சிக்கியது அவளது உடல் மட்டுமல்ல மூடநம்பிக்கையும், போலி கலாச்சாரமும் தான்

**துணைநூற்பட்டியல்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் உரை பொருளதிகாரம்.* 13- ஆம் பதிப்பு 2014, சாரதா பதிப்பகம், சென்னை- 600 014.

[2] பெர்லின், சி, குறும்பனை. *மானத்துக்கு அஞ்சி.* சேலாளி பதிப்பகம், 2021.

[3] தூரன்,பெ. *மனமும் அதன் விளக்கமும்.* பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை – 1

[4] பிரேமா, இரா. *பெண் எழுத்துக்களின் அரசியல்.* அறிவுப் பதிப்பகம், 142 – 17, ஜானி ஜான் கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை – 600 014, 2007.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

[5] முத்துச் சிதம்பரம், ச. *தமிழக நாட்டுப்புறவியலில் பெண்கள்.* முத்துப் பதிப்பகம், திருநெல்வேலி - 627 002, 2ஆம் பதிப்பு, 2005

[6] முத்துச் சிதம்பரம், ச. *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்.* பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை – 1.

[7] ஸ்டீபன் சாம், என். *கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் ஓர் ஆய்வு.* தங்கம் பதிப்பகம், 17-63, மேற்கு கல்லுக்கூட்டம் - 629 808, 1994,

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.